# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **10.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

### <u>வழக்கு எண். SA 2739/SCIC/2023</u>

திரு.M.பெருமாள்
எண். 395/1, 5வது பிளாக் பேஸ்-II — மேல்முறையீட்டாளர்
T.N.H.B. மணலி புதுநகர்
சென்னை - 600 103.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
குன்றத்தூர், சென்னை - 600 069

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 26.10.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.11.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.12.2022 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 04.01.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.02.2023 |
| 6. | ஆணையத்தின் அறிவிப்பு | 18.04.2023 |
| 7 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 04.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / குன்றத்தூர் சார்பதிவு அலுவலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "அங்கீகாரம் இல்லாத மனை விற்பனைக்கு அரசு தடை விதித்து வெளியிட்ட அரசாணை நகல் மற்றும் அரசாணை எண். தேதி ஆகிய தகவல் வழங்கவும்" என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.த.கண்ணன், சார்பதிவாளர், குன்றத்தூர் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 25/11/2022 மற்றும் 04/01/2023 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக முறையே பொதுத் தகவல் அலுவலரும், மேல்முறையீட்டு அலுவலரும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மீண்டும், பொதுத் தகவல் அலுவலர் 04/12/2024 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் போது மனுதாரர் 25/11/2022 தேதியிட்டு தனக்கு அனுப்பப்பட்ட தகவலில் குறிப்பிட்டுள்ளவாறு அரசாணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் அவ்வாறான அரசாணையின் நகல் இணைக்கப்படவில்லை என்றும் 04/12/2024 தேதியிட்ட கடிதத்துடன் சுற்றறிக்கை மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். எனவே, மேற்குறிப்பிட்ட 25/11/2022 தேதியிட்டு தகவல் அனுப்பி, அரசு ஆணையின் நகல் இணைக்காத அப்போதைய (25/11/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.துளசிகிரண், தற்போது 2 எண்.இணை சார்பதிவாளர், சைதாப்பேட்டை அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர், 04/12/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக சுற்றறிக்கையின் நகல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அரசு ஆணையின் நகலை மனுதாரருக்கு அனுப்பிவிடுவதாகவும் உறுதி அளித்தார். பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், குன்றத்தூர் சார்பதிவகம் அவர்கள் மேற்குறிப்பிட்ட அரசு ஆணையின் நகலினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**4. மனுதாரரின் 26/10/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள புல எண்களுக்கு, குன்றத்தூர் சார்பதிவகத்தில், எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து கோரியுள்ளவற்றிற்கு, பொதுத் தகவல் அலுவலர் 04/12/2024 தேதியிட்டு அனுப்பியுள்ள தகவலில், மனுதாரரை வில்லங்கச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பதிவிறக்கம் செய்து ஆய்வு செய்ததில், அந்த வில்லங்கச் சான்றிதழ் தவறானதாகவும், தவறான பதிவுகள் இடம் பெற்றிருப்பதாகவும், சில மோசடிகள் நடைபெற்றிருப்பதாகவும் மனுதாரர் புகார் தெரிவித்தார். இது மனுதாரரின் குறை தீர் கோரிக்கையாகும். எனவே, மனுதாரர் இது குறித்து துறையின் உயர் அதிகாரிகளையோ, நீதிமன்றத்தையோ அணுகி, தனது கோரிக்கையினை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலரின் 04/12/2024 தேதியிட்ட தகவலை**

**ஆணையம் பரிசீலனை செய்து, ஆவணங்களின்படியான உரிய தகவல் வழங்கப்பட்டிருப்பதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./- (முகம்மது ஷகீல் அ.்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2739/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
குன்றத்தூர், சென்னை - 600 069

2.திரு.துளசிகிரண்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) 2 எண். இணை சார்பதிவாளர்
சைதாப்பேட்டை, சென்னை

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.பெருமாள்
எண். 395/1, 5வது பிளாக் பேஸ்-II
T.N.H.B. மணலி புதுநகர்
சென்னை - 600 103.

நகல்.

1.பதிவுத்துறைத் தலைவர்.
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC